<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 370/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.2 P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கலைசெல்வன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 19.02.2026.

<u>**முதல் விசாரணை**</u>

1. நான் தற்போது பல்லடம் காமநாயக்கன்பாளையம் காவல நிலைத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன் . இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியில் இருந்த போது கடந்த *06.08.2021* ம் தேதி 15.15 மணிக்கு நானும் ,சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முக சுந்தரம் மற்றும இரண்டாம் நிலை காவலர் ரகுமான் கான் கியோர் வழக்கமாக ரோந்து அலுவலில் இருந்த போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் உடுமலை பாலப்பம்பட்டி கோஆப்ரேட்டிவ் பேங்க் அருகில் கஞ்சா என்னும் போதைபொருள் விற்பதாக தகவல் கிடைத்தது பின்னிட்டு தராசு சீல், அரக்கு மெட்ரியல்களை எடுத்து கொண்டு சம்பவ இடத்தில் 15.30 மணிக்கு சென்றோம்.
2. பின்னர் அங்கு சம்பவ இடத்தில் 2 அடையாளம் தெரியாத நபர்கள் ஒரு நபரிடம் ஏதோ வாங்கிகொண்டிருந்தது போல் நின்று கொண்டிருந்தனர்கள். எங்களை பார்த்தவும் இருவர் ஓடி விட்டனர்.

ஒருவரை நாங்கள் சுறறி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் பெயர் விஸ்வநாதன் த/பெ. வடிவேல் என்றும் பழனியை சேர்ந்தவர் என்றும் கூறியவரை அவரை விசாரித்து போது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னவரை அவரை சோதனை இடுவதற்கு நீதித்துறை நடுவர் முன்போ அதிகாரிகள் முன்போ அழைத்து செல்லட்டுமா அல்லது நானே சோதனை செய்யலாமா என்று கேட்டதற்கு அவர் நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதை அடுத்து சிறப்பு உதவி ஆய்வாளர் சோதனை செய்தார். உதவி ஆய்வளார் திரேக பரிசோதனை நமுனாவை எழுதி கையொப்பம் பெற்றார். அதில் நானும் காவலர் ரகுமான் கான் மற்றும் எதிரி விஸ்வநாதன் என்பவரும் கையொப்பம் செய்தோம்.

3. பின்னர் ஆஜர் எதிரி விஸ்வநாதன் என்பவர் சோதனை யிட உதவி ஆய்வளார் முற்பட்ட போது அவரது கையில் வைத்திருந்த வெள்ளை நிற பையை அவரே ஆஜர் படுத்தினார். அதை சோதனை யிட்டு பார்த்த போது கஞ்சா வாடை வீசியது. சிறிதளவு கஞ்சாவை தீயிட்டு கொளுத்தி பார்த்த போது கஞ்சா வாடை வீசியது. மேற்படி கஞ்சா பொருளை திண்டுக்கலில் பெயர் விலாசம் தெரியாத நபரிடம் இருந்து வாங்கியதாக சொன்னார் . மேற்படி கஞ்சா பொருளை தராசில் எடை போட்டு பார்த்த போது மொத்தம் *80* கிராம் இருந்தது. *80* கிராம் கஞ்சாவில் தலா 25 கிராம் கஞ்சாவை 2 பொட்டலம் A B என பிரித்து காக்கி கவரில் போட்டு நூலில் கட்டி அரக்கு சீல் வைத்து சாட்சி கையொப்பம் செய்தோம். மீதி *30* கிராம் கஞ்சாவை காக்கி கவரில் போட்டு *SHO* சீல் வைத்து சாட்சி கையொப்பம் செய்தோம். உதவி ஆய்வாளரும் கையொப்பம் செய்தார். எதிரி விஸ்வநாதன் என்பவரும் கையொப்பம் செய்தார்.

4. மேலும் அந்த கஞ்சாவை எங்கள் முன்னிலையில்கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள *2* வது கையெழுத்து என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ. *1* என குறியீடு செய்யப்படுகிறது.** *17.15* மணிக்கு எதிரி விஸ்வநாதன் எதிரியை கைது செய்து *17.30* மணிக்கு நிலையம் வந்தோம்.சிறப்பு உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அவருக்கு உதவியாக நாங்கள் இருந்தோம். சிறப்பு உதவி ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடமான யுகேபி நகர் உடுமலைப்பேட்டை நகர் புற எல்லைக்குள் வரும் என்றால் சரிதான். அங்கு ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் இல்லை. எதிரி

கஞ்சா என்னும் பொருளை வைத்திருக்க வில்லை என்றாலும, புள்ளி விவர கணக்கிற்காக உயர் அதிகாரிகளால் போடப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் பொது ஜன அதிகமாக உள்ள பகுதி தான் பொது ஜன சாட்சிகளை சாட்சியாக போட்டு இருப்பிர்கள் என்றால் சரியல்ல அது முள்ளு காடு. சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும்இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.